*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **06 சூன், 2025**

**<u>பக்ரீத் பொருநாள் வாழ்த்துச் செய்தி</u>**

உலகம் எங்கும் வாழும் இசுலாமியப் பெருமக்கள் அனைவருக்கும் குறிப்பாக, புதுச்சேரி வாழ் மக்களுக்கு எனது மனமார்ந்த பக்ரீத் பெருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித குலத்தின் மேன்மைக்காக, நபிகள் நாயகம் போதித்த தியாகம், சகோதரத்துவம், அன்பு, ஈகை ஆகிய நெறிகளைப் பின்பற்றி நாம் அனைவரும் அறவழியில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை இந்த நாள் உணர்த்துகிறது.

உலகில் அன்பும், அமைதியும் தழைத்திட அனைவரும் மனிதநேயம் மற்றும் சகோதரத்துவச் சிந்தனையோடு வாழ வேண்டும் என்று கூறி அனைவரது வாழ்விலும் வளமும், நலமும் பெருக வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, இசுலாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது இனிய பக்ரீத் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்குகிறேன்.

- K. கைலாஷ்நாதன்,

துணைநிலை ஆளுநர்